DINATHANTHI 20 JUL 09

## ஈஷா யோக மையம் சார்பில்

# மருத்துவ முகாம்

கோவை,ஜூலை.20–

ஈஷா யோக மையம் சார்பில் போத்தனூர் செட்டிபாளையம் அருகில் உள்ள பெரியகுயிலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் சர்க்கரை நோய் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இதில் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 300 பேர் கலந்துகொண்டனர்.

இந்த முகாமில் பச்சாபாளையம் ஊராட்சி தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். பச்சாபாளையம் ஊராட்சி உப தலைவர் விஜயகுமார்,பெரிய குயிலை வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர்கள் மனோபிரியா, கோபிநாத், மற்றும் ஞானபிரகாசம் ஆகியோர் கலந்துகொண்டனர். முடிவில் ரமேஷ் நன்றி கூறினார்.